Kerala Gazette No. 34 dated 25th August, 2020.

**PART I** **Section iii**

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-எஃப்) துறை

## அறிக்கை

எண் 24395/ச. இ. எஃப். 2/2017/சட்டம்.

2018 பிப்ரவரி 12
திருவனந்தபுரம், 1193 மகரம் 29
1939 மாகம் 23.

2018-ம் ஆண்டு பிப்ரவரி 12-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்டத்துறை செயலாளர்.*

2018-ன் அவசரச்சட்டம் எண் 19

# 2018-ன் கேரள நீர்பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (திருத்த) அவசரச்சட்டம்

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஒன்பதாவது ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.

2003-ன் கேரள நீர் பாசன மற்றும் நீர் பாதுகாப்பு சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கான ஒரு அவசரச்சட்டம்.

முன்னுரை.—2017-ன் (2017-ன் 27) கேரள நீர்பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (திருத்த) அவசரச்சட்டத்தை கேரள ஆளுநர் 2017 டிசம்பர் மாதம் 7-ம் தேதி விளம்பர அறிக்கை செய்ததாலும்;

2018-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதி தொடங்கி 2018 பிப்ரவரி மாதம் 7-ம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் மேற்குறிப்பிட்ட அவசரச் சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையின் ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்கான ஒரு மசோதாவை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யவும் நிறைவேற்றவும் முடியாமல் போனதாலும்;

இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (2)-ல் துணைப்பிரிவு (எ)-ன்படி மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டம் 2018-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ஆம் தேதி அமலில் இருந்து நின்றுவிடுவதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை நிலைநிறுத்தாவிடில் இடர்பாடுகள் ஏற்படும் என்பதாலும்;

கேரள மாநில சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இல்லாததாலும், தாம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலைகள் நிலவுகிறது என்று கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, அதனால் இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன் படி வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் விளம்பர அறிக்கை செய்யப்படுகிறது.

1. சுருக்கப்பெயர் மற்றும் தொடக்கம்.—(1) இந்த அவசரச்சட்டம் 2018-ன் கேரள நீர் பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (திருத்த) அவசரச்சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது 2017-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்பட வேண்டும்.

2. 2003-ன் 31-வது சட்டத்தை தற்காலிகமாக திருத்தம் செய்தல்.—இந்த அவசரச்சட்டம் அமலில் உள்ள காலயளவில் 2003-ன் (2003-ன் 31) கேரள நீர் பாசன மற்றும் நீர் பாதுகாப்பு சட்டம் (இதற்கு பிறகு முதன்மை சட்டம் எனக் குறிப்பிடப்படும்), பிரிவுகள் 3 முதல் 8 வரையில் குறிப்பிட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு அமலில் இருக்கும்.

3. பிரிவு 37-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 37-ல் துணைப்பிரிவு (3)-க்கு பிறகு பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது,-

‘‘(4). எந்த ஒரு நபரும் குப்பை அல்லது கழிவுகள் அல்லது மனிதக்கழிவை எந்த ஒரு நீர் நிலையிலோ அல்லது அதன் கிளைகளிலோ குமிக்கக்கூடாது அல்லது கழிவு நீர் அதற்குள் கலந்துவிட அனுமதிக்க கூடாது அல்லது தண்ணீரை எந்த வகையிலும் மாசுபடுத்தக் கூடாததாகும்’’.

4. பிரிவு 58-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 58-ன் துணைப்பிரிவு (1)-ல் உட்பிரிவு (ஜெ)-க்கு பிறகு பின்வரும் உட்பிரிவு சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது,-

‘‘(கெ). ஒரு காவல் பொது ஆய்வாளரின் (ஐ.ஜி) பதவிக்கு குறையாத ஒரு காவல் அதிகாரியை அரசு பரிந்துரை செய்யவேண்டும்’’.

5. பிரிவு 59-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 59-ன் துணைப்பிரிவு (2)-க்கு பதிலாக பின்வரும் துணைப்பிரிவினை சேர்த்துக்கொள்ள வேண்டும், அதாவது,-

"(2) அதிகாரிகளின் கூட்டத்திற்கான குழுமத்தின் எண்ணிக்கை தலைவர் உட்பட நான்கு உறுப்பினர்களாக இருக்க வேண்டும்".

6. பிரிவு 70-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 70-ன் துணைப்பிரிவு (3)-க்கு பதிலாக பின்வரும் துணைப்பிரிவு சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது,-

"(3). பிரிவு 7-ன் அல்லது பிரிவு 37-ன் துணைப்பிரிவு (3) அல்லது துணைப்பிரிவு (4)-ல் உள்ள விதிமுறைகளை யாரேனும் மீறினால், தண்டணையாக மூன்றாண்டுகள் வரை நீடிக்க வாய்ப்புள்ள சிறை தண்டனை அல்லது இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்க வாய்ப்புள்ள அபராதம் அல்லது இரண்டு சேர்த்த தண்டணை அளிக்கப்படும்."

7. புதிய பிரிவு 70எ உட்புகுத்தல்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 70-க்கு பிறகு பின்வரும் பிரிவினை உட்புகுத்த வேண்டும்,-

"70எ. நீதிபதியின் சிறப்பு அதிகார வரம்பு.—1973-ன் (1974-ன் 2-வது மத்திய சட்டம்) குற்றவியல் நடைமுறைக் குறியீட்டின் பிரிவு 29-ன் துணைப்பிரிவு (2)-ல் என்னதான் கூறப்பட்டு இருந்த போதிலும், முதல் வகுப்பு நீதிபதிக்கு இந்த சட்டத்தின்படி தண்டிக்கப்படும் குற்றங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்க வாய்ப்புள்ள அபராதத்தை சுமத்தும் அதிகார வரம்பு உடையதாக இருக்கும்".

8. பிரிவு 72-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 72-ன் உட்பிரிவு (சி)-யில் "இரண்டு வருடங்கள் ஆனால் ஆறு மாதங்களுக்கு குறையாமல் மற்றும் முப்பத்தைந்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கும் அபராதம்" என்னும் வார்த்தைகள் மற்றும் குறியீடுகளுக்குப் பதிலாக, "மூன்று வருடங்கள் ஆனால் ஒரு வருடத்திற்கு குறையாமல், மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய் வரை உயர வாய்ப்புள்ள அபராதத் தொகையுடன்" என்னும் வார்த்தைகள் மற்றும் குறியீடுகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியதாகும்.

9. இரத்தாதலும் காப்பும்.—(1) 2017-ன் கேரள நீர்பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (திருத்த) அவசரச்சட்டம் (2017-ன் 27) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்ட போதிலும், மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட முதன்மை சட்டத்தின்கீழ் செய்த ஏதேனும் காரியம் அல்லது எடுத்த ஏதேனும் நடவடிக்கையை இந்த அவசரச்சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட முதன்மை சட்டத்தின்கீழ் செய்ததாக அல்லது எடுத்ததாக கருதப்படவேண்டும்.

பி. சதாசிவம்,

ஆளுநர்.